# சவுக்கடி?


M. S. சிவசுவாமி

எழுதியது.



கிளர்ச்சி பதிப்பகம்,

தூத்துக்குடி.


—★—

முதற் பதிப்பு :
ஜூன் 1949

விலை அணா பத்து.

எமது அடுத்த நூல்

இழியுது பாரீர்

சோணையன் முரசு

?

# எமது நோக்கம்.

குறிப்பிட்ட ஒரு பிரச்சனையை மக்களின் மன திற்குள் நேரடியாகப் புகுத்துவதற்கு பேனாவுக்கு ஒரு தனி வலிமை வேண்டும். அந்த வலிமையும் திறமையையும்படைத்த ஒருசில தமிழ் நாட்டு எழுத் தாளர்களுள் தோழர்: **சிவசுவாமி** யும் ஒருவர் என் பதை இந்நூல் விளக்கும். இந்த வரிசையில் இன் னும் பல நூல்களை வெளியிடவேண்டுமென்பதே நமது நோக்கம். இதுமுதல் முயற்சி.

கிளர்ச்சி பதிப்பகத்தார்.

## சில வார்த்தைகள்.

நான் தொடர்ச்சியாக 'கிளர்ச்சி' இதழ்களில் எழுதிவந்த கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். திராவிடர் கழகத்தின் வளர்ச்சியையும் செல்வாக்கையும் கண்டு பொறாமை கொண்ட பார்ப்பனப் பத்திரிகைகளுக்கு பதிலாகவும், மறுப்பாகவுமே இந்நூல் எழுதப்பட்டது. நூலின் பெரும்பாகம் கொச்சையாகவும், கீழான நடையிலும் கையாளப்பட்டிருப்பது அடிக்கு அடி, உதைக்கு உதை, மறுப்புக்குமறுப்பு என்றமுறையின் விளைவுதானே யொழிய வேறொன்றுமில்லை. இந்நூலை வெளியிட்ட கிளர்ச்சி பதிப்பகத்தாருக்கு என் நன்றி.

ஆசிரியர்.

# சவுக்கடி!

தர்ப்பையும் பறிபோச்சு, தட்சணையும் போச்சு ஆட்டிப் (மணி) பிழைக்கச்சொல்லி ஆணையிட்டான் உடையாளி என்று ஒப்பாரி வைப்பதற்குப்பதிலாக, குடைத்துணி குருடர்கள், ஈ. வெ. ரா வின் ரசாக்கர் படை, அகங்காரங்கொண்ட கௌரவர் படையென் றெல்லாம் ஈனத்தனமாய் கன்னு பின்னு என்று கத்தும் உண்டைக்கட்டிகளுக்கு சண்டையிடும் சனுதன உஞ்சவிர்த்தியே, ஆழந்தெரியாது காலை யோட்டிய அனுமதேயமே! கௌரவர் படையென் ருய் உண்மை, முற்றிலும் உண்மைதான். பண் டைய அரசு முறைப்படி மூத்தவனுக்குத்தான் அர சுரிமையாகையால், இளையவர்களுக்கு ராஜ்யமில்லை யென்று உரிமைகொண்டாடியது குற்றமா?

கன்னிப் பருவத்தில் கலியாணமாகுமுன்பு சூரியனுடனும், திருமணமானபின் புருஷனிருக்க யமன், வாயு, இந்திரன் ஆகியவர்களுடன் (உங்களு டைய தார்மீக ஹிந்து சாஸ்திரப்படி) விபச்சாரம் செய்து தர்மன், பீமன், அர்சுனன் ஆகியவர்களை பெற்ற அப்பழுக்கற்ற விபச்சாரியாகிய குந்தி மக் களுக்கு வக்கலாத்து வாங்கும் வருணாஷ்ரம குட்டை யில் ஊறிய மட்டையே நீதானென்ன, உன் இனந் தானென்ன, குந்தியின் வர்க்கத்தைச் சேர்ந்தது தானே! உத்தியோக உயர்வுக்காக Leather to

Leather Nothing damage என்ற ஈனக்கொள்கையைக் கொண்டு தாயை தாளம்போடச் சொல்லி தமக்கையைப் பாடச்சொல்லி, தங்கையை ஆடச், சொல்லி, ஏன்? தாமீன்ற மக்களையுங்கூடமல்லா—டச்செய்து Promotion Please கேட்கும் வீணர்கள் தானே நீங்கள்.

உன் 7-11-48 இதழிலே 7ம் பக்கத்தில் பேடிக் கூட்டமாகிய பிடாரிகள் என குலேத்த குக்கலே! யாரைப்பார்த்து பேடிகளென்றாய்? உண்டைக்கட்டிக்கும் உளுத்த கடலைச் சுண்டலுக்கும் கோவில் களில் அர்த்தராத்திரியானலும் அயராது காத்து நிற்கும் அக்கிரகாரக் கும்பல்களே அக்கிரகாரத் திண்ணையில் அலுத்தோ சலுத்தோ அயர்ந்துறங்கு பவர்கள் யாரேயாயினும் தட்டி எழுப்பி தக்கது தந்து தாகத்தைதீர்க்கும் ஆசை மந்திர அர்ச்சகிகளாய்! அன்னநடை மின்னலிடையென எண்ணத் தக்க மண்டைகளைப் படைத்த முண்டைகளின் வழி வந்த நீங்கள் பேடிகளா? அன்னியர்கள் அலைகடலில் காலெடுத்துவைக்க அஞ்சிய நாட்களிலே கலம் ஓட்டி கடாரம் வென்றநாங்கள் பேடிகளா? நன்மதியைக் கெடுக்கும் சு. ம. க்கள், விவேகமற்ற புத்தி படைத்த கருஞ்சட்டைப் புலிகள் என்றெல்லாம் மண்டூகத் தொனியில் மாரடித்தழும், முண்டைகளை முறடர்களோடு மோதவிடும் பௌண்டரீகயாகப் பிண்டங்களின் பித்தாலாட்டப் பிழைப்புக்கெனப் பத்திரிகை ஆரம்பித்ததுமின்றி சனாதனம் சாய்ந்

தது, சாதி தேய்ந்தது, சாமி காய்ந்தது, என்று புரட்டாசிமாதப் புல்லினங்கள்போன்று புலம்புவதைக்கண்டு நல்லறிவுள்ளாரும் நாட்டு நலத்தில் நாட்டம் உள்ளாரும் ஏற்பரோ உன் கூற்றை. எமதியக்கத்தின் வளர்ச்சியையும் அதனிடத்தே கொண்டுள்ள சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளின்பயனைய் காட்டுத்தீ போன்று நாடெங்கும் சீர்திருத்த திருமணங்கள் பரவுவதையும் சிந்துவாரற்றுக் கிடக்கும் திருடர் குகைகளாம் கோவில்களின் நிலையையும் கண்டு, அப்பன்காணி அழிந்தது, ஆத்தாள் பண்ணை தேய்ந்தது, அக்காள் உடமை தேய்ந்ததுஎன்று சர்க்கார்முன் நீங்களிடும் ஒப்பாரிகளும், திராவிடர் கழகத்தை சட்ட விரோதமாக்குங்கள்! விடுதலையை நிறுத்துங்கள்!! என்று தலையங்கம் தீட்டும் இழிகுண மொட்டச்சி மக்களின் ஓட்டை மண்டைக்கு ஒருமுறையல்ல பலமுறையும் பேனை தேயும் வரை தீட்டுவோமென்பதை யறிந்துகொள்

பார்ப்பனீயம் ஓங்கவும் திராவிடம் அடங்கவும் என்று எழுதியிருக்கும் அமங்கிலி மக்களாகிய நீவிர் எங்கிருந்து வந்தவர்களென்பதும், முக்கோடு நெற்றிக்கேறியதின் காரணத்தையும் உங்கள் புல்லக்காள் பூகேசத்தில் ஏழேகால் எவ்வாறு உச்சிக்கேறியதென்பதுபோன்ற உண்மைகளை இன்னாட்டு மக்கள் உணர்ந்த மறுநிமிடமே உஞ்சவிருத்தி உலுத்தர்களாகிய நீவிர் இங்கிருந்து ஓடி உயிர் பிழைக்க நேரிடும் என்பதை உணர்ந்தாவது ஆழப்

பிறந்த அறிவுடைத் திராவிடப் பெருங்குடி மக்களி டம் அண்டிப் பிழையுங்கள். உணர்ச்சி யற்றவர் களென்றும், சுயமதி கெட்டவர்களென்றும் சுணங் கனைப்போல் குரைத்துத் திரியும் குல்லுகபட்டன் வழிவந்த குந்திமக்களின் வாரீசாகிய வம்பர்களே, உடலுழைப்பின்றி ஊதாரித்தனமாய் ஒருவருக்கும் விளங்காத சொற்களை மந்திரமென்றோதி மானங் கெட்ட தனமாய் கோவில்களை முற்றுகையிட்டு உண்டைக்கட்டிகளை உண்டுஉருளும் முண்டைகள் மக்களாம் சனாதனச்சிற்றினங்களே, யார் உணர்ச்சி யற்றவர்கள் என்பதை சிந்தித்து எழுது. திராவிட நாட்டைஸ்தாபிக்க நாங்கள் உங்களை விடமாட்டோம் என்று சண்டப் பிரசண்டமாய் சற்றும் மதியின்றி எழுதும் சனாதன சும்பனக்கூட்டமே தூங்கினவன் சாமானுக்கு ஏங்கிநிற்கும் சனாதன துர்க்குணங் களாகிய நீவிர் யார் எங்கள் பிறப்புரிமையை தடை செய்ய? உண்டைக்கட்டியை உருட்டி உருட்டி விழுங்கி செறிச்கமுடியாமல் L. G. பெருங்காயத்தை தின்று தொப்பையை சுமக்கமுடியாமல் தவளையைப் போல் தத்தி நடக்கும் தர்பைச் சூரர்களே உங்க ளால் நினைக்கவும் முடியுமா எங்களை தடைசெய்ய.

இந்த நாடு எங்கள்நாடு, ஆளப்பிறந்த வர்கள் திராவிடர்கள். ஆளப்பிறந்த நாங்கள் தாளமாட் டோம் பிறர்ஆட்சிக்கு, நுமது குல ஆரியமன்னர் கனக, விசயன் அறிவீனத்தால் திராவிட மன்னர் களை இகழ்ந்துரைத்ததிற்காக கங்கை கரைவரை

படையெடுத்து கல்லேற்றிக்கொண்டுவந்தது மறந்து போனீர்களோ மந்தமதி கொண்ட மானுபிமான மற்ற ஈனபிறவிகளாகிய நீவிர். எதிர்த்த ஆரிய அரசர்களையெல்லாம் அடிபணியவைத்து இமயத்தில் எங்கள் கொடியைப் பொறித்ததை மறந்தீர்களோ மண்டுகங்களாகிய நீவிர். பகுத்தறிவுப் பாறையிலே பார்ப்பனியம் வாழ்கவென்று சாடுவீர்களானால் மனிதாபிமானம் சற்றுமின்றி மக்களுக்கு அபினைப் போன்ற மதாபிமான மண்டைக்கிருக்கால் நூல் ஆராச்சிஇன்றி, விவாத முறையின்றி இலக்கியச் சான்று இன்றி இழிதனமாய் கத்தும் உங்கள் உழுத்த மண்டைஉருள ஊத்தவாய் மூட அழுத்தம் திருத்தமான ஆழ ஆப்பு அடிக்கடி அறைந்து கொண்டேயிருப்போமென்பதை யறிந்தாவது ஒதுங்கி நின்று பிழையுங்கள்,

தன்மான அறிவியக்க அம்பானது, வைகுண்டத்தை சிதறடித்து கைலாசத்தைக் கலங்கடித்து மோக்ஷலோகத்தை முடிச்சுமாறிகளாகிய உமது கூட்டத்தின் மோசடிச்சொல் எனக்காட்டி பிரம்ம லோகத்தையும் பிய்த்தெறிந்ததைக் கண்ணுற்றும், கருத்தின்றி எங்களுடன் வம்புக்கு வருவதை நோக்கின்; வேலிககுள் போகும் பாம்பை நும் வீட்டு.........க்குள் வரவழைப்பதைப்போல் தெரிகிறது. கிணற்றுத் தவளை போன்ற பெரியாரின் கோட்டையை தகர்த்தெறியப் படுமென்று தலைகால் தெரியாமல் எழுதி துள்ளிவிளையாடும் தறுதலையே,

நீவிர் நாட்டிலே இருக்கின்றீரா அல்லது காட்டிலே இருக்கின்றீரா? முப்புரி நூலை தொப்பையிலணிந்த தூர்த்தர்களே, நீவீர் இது காரும் எமதியக்கத்தையும் எம் தலைவரையும் காரணமின்றி கடுஞ் சொல்லால் ஏசியும்பேசியும் எழுதியும் கழுதை கூப்பாடு போட்டும், எங்கள் பகுத்தறிவுப் பாசறைக்கு மக்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் கூடிக்கொண்டு தானிருக்கிறார்களே ஒழிய குறையவில்லை! பகுத்தறிவுப் பெட்டகமாம் அந்தப் பழுத்த பெருங்கிழவர் ஈ. வெ. ரா. பொருமையைக் கைக்கொள்ளாது சிறிது கண்ஜாடை காட்டினாலும் அக்கிரகாரக் கோட்டை அழிந்துபோயிருக்குமே.

மக்களிடத்திலே இன்று தோன்றியிருக்கும் ஈடு இணையற்ற அந்த இன எழுச்சிக்கு முன் நும் இனம் இதற்குள் பஞ்சாய்ப் பறந்திருக்குமே எம் தலைவர் ஈ. வெ. ரா. இல்லாவிடில். எக்காலத்திலும் எத்திப் பிழைக்க முடியாதென்பதை உணராது, இன்னும் உலர்ந்த புல்லையும் கிழிந்த பஞ்சாங்கத்தையும் காட்டிப் பிழைக்கலாமென்பதை மறந்து, காகிதம் இருக்கிறது கருப்பு மையுமிருக்கிறதென்ற காரணத்தால் கன்னா பின்னா வென்று உளருவாயானல் உனது **D. H. Trade Mark** முகத்தில் காரியுமிழ்வார்கள் எம் இனத்தார்கள் என்பதும், எங்களிடம் அண்டிப்பிழைப்பதும் போய்விடுமென்பதை உமது துப்புக்கெட்ட மூளைக்கு துருவிச்சொல்கி

றேன், திருந்திக்கொள். ஆத்தாளை அடியெனச் சொல்லி அப்பனுக்கு நமஸ்தே சமர்ப்பிக்கும் சனு தன அனுமதேய அமங்கிலி மக்களே யாரிடத்தில் பயமுறுத்துகிருய் நும் இரத்தம் வீரம் நிறைந்த தென்று. நும் ஜாதிப் பாகுபாடோ, மதமோ, சாமியோ இன்னுமெந்தக் கடவுளாலுமே முட்டுக்கட்டை போடமுடியாத அளவுக்கு இனஉணர்ச்சி யென்னும் இலட்சியப் பாதையில் திராவிடத் தனியரசைக்காண தரணியில் பாணி பாடிச்செல்லும் எங்களிடமா நபுஞ்சக குள்ள நரிக்கூட்டமாகிய நீவிர் வீரம் பேசுவது. நும் இனத்தின் வீரத்தை சரித்திரத்தில் பார்த்தால் தெரிகிறதே.

வெள்ளையர்களோடு வீரப்போர் புரிந்த வங்க நாட்டுச்சிங்கம் சிராஜ் உத்தௌலாவை, அவனது சோற்றைத்தின்று ஊழியம் பார்த்த அமீர்சந்த் என்ற பார்ப்பான் கிளைவிடம் ஒருலட்சம் ரூபாய் லஞ்ச உடன்படிக்கை செய்து, காட்டிக்கொடுத்து நாட்டை அடிமையாக்கிய அமீர்சந்த் வழிவந்த நீயா வீரம்பேசுவது. தஞ்சையை நோக்கி அவுரங்கசீப் பின் குதிரைப் படைகள் அணிவகுத்து வரும்பொழுது தஞ்சை மன்னனிடம் வேலைபார்த்தபார்ப்பன மந்திரி, தஞ்சை மன்னனிடம் தெருவெல்லாம் துளசியைத் தூவினல் விஷ்ணுவுக்குப் பிரியமான துளசியைத் தாண்டி குதிரைப்படைகள் வராதென்று சொல்ல, வகையற்ற மன்னனும் நுங்கள் இனத்தவரின் மடமையை நம்பி துளசிச் செடியை தெரு

விலே தூவ, தெருவெல்லாம் புல்லென்று நினைத்து பசியுடன்வந்த பரியெல்லாம் பாய்ந்து தஞ்சை மன்னனை பணியச்செய்த நும்மவர் சூழ்ச்சிக்குப் பெயர்வீரமா?

வெள்ளையனை விரட்டுவேனென வெஞ்சினம் பூண்டு கடும்போர் புரிந்த திப்புசுல்தானைக் காட்டிக் கொடுத்து இன்னாட்டை அடிமைக் குழியில் தள்ளிய பார்ப்பனப் பண்டிமக்களாகிய நீவிர் செய்யும் சூழ்ச்சிக்கும் சூதுக்கும் பெயர் வீரமா? எத்திப் பிழைக்கும் இழிகுணச் சனாதனாளர்களே இருநூறு ஆண்டுகளாய் அடிமைத் தனத்தில் ஊறிக்கிடந்த இன்னாட்டை தன் அன்பு மொழியாலும் அகிம்சைப் போராலும் ஆங்கிலேயர்களை அப்பால்விரட்டி நமக்கு சுதந்திரம் வாங்கித் தந்த இந்நாவலந்தீவின் ஒப்புயர்வற்ற காந்தியடிகளை வஞ்சகமாய் வணங்கிச் சுட்டுக் கொன்ற நும் மொட்டச்சி மக்கள் செய்யும் பாதகத் தொழிலுக்குப் பெயர் வீரமா? உலர்ந்த புல்லும் ஓட்டை ஏடுங் கொண்டு நாட்டை மொட்டை யாக்கிய நாடோடி சனாதன சவுண்டிகளே அடி அறுபது கோணலும் நுனி நூறு கோணலுமாய் உள்ள உமது எழுத்து வரிசைக்கும், நுமது அவசர புத்திக்கும், சுருக்கியும், குறுக்கியும், ஏற்றவேண்டியதை ஏற்றியும், ஒட்ட வெண்டியதை ஒட்டியுமிருக்கிறேன் திருந்திக்கொள். இன்றேல் தேய்ந்த கட்டையைக் கொண்டு தீட்டுவேன் உங்கள் காய்ந்த மூளை கலங்கும் வரை.

ஒரு இயக்கத்தின் கொள்கை என்ன, லட்சியம் என்ன, கோஷம்என்ன என்றுகூட அறிந்து கொள்ளாத நிலைமையில் கண்டித்து குறைசொல்லி எழுத ஒரு பத்திரிக்கையை ஆரம்பித்து அதற்கு ஆசிரியர் என்ற தோரணையில் முன் வந்த உமது போக்கைப் பார்த்தால் அடைமழைக்குகூட பள்ளியில் ஒதுங்காத ஓர் மனித உருவம் பாப்பாரக் குலத்தில் உதித்திருக்கின்றதே வென்று ஆச்சரியப்பட வேண்டியதிருக்கிறது.

முதல் கலத்தில் சாமியே இல்லை என்று சொல்லும் சண்டாளர்கள், என்று எழுதிக்கொண்டு அடுத்த கலத்தில் உன்கட்சியின் தெய்வ வணக்கம் என்ன என்று கிடாவும் உன் மடமையைப் பார்க்கின் நீவிர் நாட்டிலே மக்களுடன் வாழ்வதற்கு லாயக்கில்லை யென்பதுடன் சென்னைக் கீழ்ப்பாக்கத்திலுள்ள பைத்தியக்கார வைத்தியசாலையில் வைத்துப் பாதுகாக்கவேண்டிய பேர்வழி என்றுதான் முடிவு கட்ட வேண்டியதிருக்கிறது.

தமிழ் எத்தனை ஜில்லாக்களில் பேசப்படுகிறது என்றவிபரம்கூட தெரியாமல் கேள்விகள் எழுதும், கேள்வி ஞானம்கூட இல்லாத தர்ப்பையை நம்பிய அர்ப்பர் குலாமணியே, தமிழ் அந்தணர் என்ற பசுத்தோல் போர்த்துக்கொண்டு ஒரு குலத்துக்கொரு நீதி புகட்டும் மனுவை ஆதாரம்காட்டி தமிழர்களுக்கு புரியாத வடமொழி வாக்கியங்களை சரமாரியாய்க் கலந்து எழுதும் கணிகையர் குணம்

படைத்த கசடராகிய நீவிர் யார் எங்களைக் கேட்க? தமிழ் எத்தனை மாவட்டங்களில் பேசப்படுகிறது; தமிழ் பேசும் மக்கள் எத்தனை பேர் என்ற பால பாடங்கூட அறியாத பராரி மக்களாம் பார்ப்பார பாதகராகிய நுமக்கு ஒரு பத்திரிகையும் வேண்டுமா? வெட்கம், மானம், ரோசமின்றி, காரணு காரண மில்லாமல், பொருளில்லாமல், வாக்கியக் கோர்வை யில்லாமல் வாய்க்குவந்ததை யெழுதும் நுமது வகை கெட்ட வாசகங்களைப் பார்க்கின் வாரியலபிஷேகம் கொடுத்துதான் தீர்க்க முடியும்.

கன்னடமும், களிதெலுங்கும், கவின்மலையா ளமும், துளுவும், தமிழும் சேர்ந்தே திராவிடநாடு என்று பண்டைய சங்க இலக்கியங்களிலும் இன்றைய சரித்திரங்களிலு மிருக்கின்றதை தெரியாத தர்ப்பைப் புல்லரே! திராவிட நாட்டிலே பிறந்த திராவிடத்தந்தை பெரியார் ஈ. வே. ரா. யார்? திராவிடநாடு கேட்க, என்று கர்த்தபக்குரலில் குக்கலைப்போல் குரைக்கும் குள்ளநரிக்கூட்டமாகிய நீவிர்யார் இக்கேள்வியைக் கடாவ? மத்திய ஆசியா விலிருந்து மாடுகள் மேய்க்க வந்த மடைமைக் கூட் டத்தாராகிய நீவிர் இவண் கூடிப் பிழைப்பதை விட்டு அரசியல் துறையில் அறிவுக்கொவ்வாத முறையில் தத்துவத்துக் கொவ்வாத முறையில் மண்டூகம்போல் மதிகெட்ட. தனமாய் கத்தாதே. கத்துவாயானல் மீண்டும் காட்டுக்கு ஓட்டுவர், என் பதை அறிந்து அறிவுடன் நடந்துகொள் என்பதை அறிவுறுத்துகிறோம்.

அன்னியனின் தொடர்பு கூடாது என்றால் தன்னுடைய தங்கையை தமக்கையை ஏன் கட்டிக் கொள்ளக் கூடாதென்று கதறும் களிமண் மூளை படைத்த கனிகையர்களின் திரு அவதாரங்களை உமக்கோ, உமது பத்திரிக்கையில் எழுதும் தடித் தனம்படைத்த பொடியர்களுக்கோ சிறிதளவாவது சிந்திக்கும் சக்தி, ஆராயும் அனுபவமிருந்தால் இப்படிக் கேட்பீர்களா? ஒருவேளை வெள்ளையர் களை விரட்டுவதற்கு வீரப் பிரசங்கங்களும், மறிய லும் நடத்திய காலத்திலே நீவிர் கேட்டிருக்கும் கேள்வியைப் போல் நுமது தங்கையரையும், தமக் கையர்களையும், ஏன் உங்களைப் பெற்ற தாயையும் நீங்களே கட்டிக்கொண்டிருப்பீர்கள் போலும் அதனால் தான் இக்கேள்வியைக் கேட்க அதிலும் வெட்கம் மானம் ரோசமின்றி நுமது தார்மீக இந்து பத்திரிக்கை மூலம் எழுதிக் கேட்கத் துணிந் தீர் போலும்.

வியாழனன்றுகட்டி வெள்ளியன்று கழற்றி, கழற்றிய ஏழாம் திங்களில் தெருக்கோடியில் புதைத்து வைக்கும் புவனேஸ்வரிகளின் புனிதத் திருக்கூட்டங்களே உங்களைப்பார்த்து சீறுவதிலோ சிரிப்பதிலோ பயனென்ன, உங்கள் புராணங்கள் கூட தாயைப்புணர்ந்து தகப்பனைக் கொன்று பின் விஷ்ணுவைத் தொழுததும் மோட்சம் கிடைத் ததென்று சொல்லும்பொழுது நீங்கள் ஏன் இக் கேள்வியைக் கடாவமாட்டீர்கள். கடவுளை நம்பாத

நீங்கள் அவன் படைத்த உலகத்தில் இருக்கலாமா வென்று உளரும் உஞ்சிவிருத்தி உலுத்தர்களே யார் இந்த உலகத்திலிருக்கக் கூடாது? கோவில் களை காட்சிசாலையாகவும், தொழிற்சாலையாகவும் ஆக்கவேண்டு மென்று சொல்வதுடன், மனித னிடத்திலே சக்கரைப் பொங்கலும் தேங்காய் பழ மும் உலகத்தைப் படைத்த கடவுள் கேட்குமானல் அக் கடவுளையே உடைத்தெரிய வேண்டுமென்று இருபதாண்டுகளாய் இடையருப் பிரசாரம் செய்யும் எங்களைக் கல்லாய், உமையாய் சபிப்பதை விட்டு விட்டு, எங்கள் தன்மானக் கூட்டம் நாளுக்கு நாள் பெருகிவருவதை உங்கள் கடவுள் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறார். (கடவுள் இருந்தாலல் லவோ சபிப்பார்)

இதைப் பார்த்துக் கொண்டு கடவுளின் அந்த ரங்க காரியதரிசிகளாகிய நீவிர் இவ்வுலகத்தில் இருக்கலாமா? உடனே செத்துமடிய வேண்டாமா? காக்காய்க் கூட்டம், கரிச்சட்டி கூட டம, அமாவா சைக் கூட்டம், குடைத்துணிக் கூட்டம் என்று கருப்பு நிறத்தைக் கண்டு, மான் வேட்டையில் மிறண்ட நாய் போல் கத்தும் நபுஞ்சகக் கூட்டங் களே, உங்களது உதவாக்கரை இத்த மண்டை களுக்கு எத்தனை பாணங்கள் விட்டாலும் சீர்திருந் தமாட்டீர்கள் போலும்; கருப்பு நிறத்தைக் கண்டு காய்ந்துவிழும் நாய்களே, கலை என்ற போர்வை யைப் போர்த்தி பரதநாட்டியம் என்ற பெயரால்

காலைத் தூக்கியாடும் பார்ப்பனீயப் பைசாசங்களே கடைக்கண் வீச்சு வீசும் நுங்கள் கன்னியர்களின் கேசத்தின் நிறம் கருப்புத்தானே, கருப்பு நிறத்தைக் கண்டு காய்ந்து விழும் நீங்கள் நுங்கள் கன்னியர்களின் கருநிறங் கூந்தலை, உங்கள் அமங்கிலிகளைச் செய்வது போல் கருங் கூந்தலின்றி மொட்டையடித்து விடுவதுதானே!

கருப்பு நிறத்தைக் கண்டு காட்டுமாடு போல் மிறளும் சனாதன குற்குட்டாக் கூட்டங்களே இந்த உலகத்திலேயுள்ள சகலவற்றையும் பார்ப்பது கண்ணிலே யிருக்கப்பட்ட கருவிழிகள் தானே, அதுவும் கருப்பா யிருக்கிறதென்பதற்காக பார்ப்பனீயப் பண்டிமக்களாகிய நீங்கள் அனைவரும் உங்கள் கரும்விழிக்கண்களை பிடுங்கி விடுவது தானே! 28—11—48-உ இதழ் இரண்டாம் பக்கத்தில் இரண், டாம் பத்தியில் **துறையூர் மாணவர்கள் இன்னும் இந்தி புஸ்தகங்களை வாங்காதிருக்கும் போது எப்படி வகுப்பு மாணவர்கள்** கொழுத்தியிருக்க முடியுமென்றும், மூன்றும் பத்தியில் மாணவர்கள் இந்தியை ஊக்கத்துடனும் திறமையுடனும் கற்றூர்கள் கால்வருடப் பரீக்ஷையிலும் நல்ல **மார்க்குகள் வாங்கினூர்கள்** என்று முன்னுக்குப பின் முரணுகவும் பொய்யாகவும் வேண்டுமென்றே திருத்தி எழுதும் முட்டாள்களின் பிம்பமாம் மொட்டச்சி மக்களே! புஸ்தகமே வாங்கவில்லையென்கிறுய் பின் படிப்பதெப்படி? பரீசையில் மார்க்குகள் வாங்குவது எப்படி? உன்னுடைய

பொய்யுரைகளைநம்ப உம்மைப் போன்ற முட்டாள் திருக்கூட்டம் இல்லையென்பதை உணர்ந்து நட.

தன்மான மிழந்த அசிங்கங்களே வென்றும் தலைவர்களும் இயக்கத் தோழர்களும் சரியாக நடக்காத காரணம் என்னவென்றும் கரடியாய் கத்தும் கபோதிக் கூட்டங்களே யார் அசிங்கங்கள்? உங்கள் திருக்கூட்டமன்றோ அசிங்கங்கள்; அருண்டேல் துரை மகனாரின் அதரங்களுக்கும், சுப்பாராயர்களின் சொகுசுக்கும், தேவதாசர்களின் திருக்கரத் தீண்டலுக்கும் வழி காட்டிக் கொடுத்தீர்களே அது தான் அசிங்கம். அது மாத்திரமல்ல, கட்டிய கணவனுக்கு டிமிக்கி கொடுத்து கபுரோடு கனக மார்க்கமாய் விமானத்தில் பறத்துசென்ற உங்கள் பாவையர் செய்தது அசிங்கம்.

ஏன்? உங்கள் அக்கிரகார அமங்கிலிச் செல்விகள் சென்று சீரழிவதை குறிப்பிட இந்த ஒரு பத்திரிக்கை போதாதே அசிங்கத்திலே பிறந்து அசிங்கத்திலே வளர்ந்த ஏ! அக்கிரகார அருதலிப் பத்திரிக்கையே தட்டிக்கேட்க ஆள் இல்லா விட்டால் தம்பி சண்டப்பிரசண்டனும் என்ற பழமொழியைப் போலல்லவா இருக்கின்றது உன் தருதலைத் தறகுறிப்போக்கு. துரோபதைக்கு வக்காலத்து வாங்கி பத்தினிஎன்று பறைசாற்றும் பார்ப்பார் குலவிலக்கே, ஐந்து கணவனைக் கட்டியதுமன்றி ஆறுவதுபேராக கர்ணனையும் காதலித்ததாக அருவருப்புள்ள உங்கள் குருகுலக்கதையாம் பாரதத்திலேயே

தெளிவாய் எழுதியிருந்தும் துரோபதையின் பத்தினித் தன்மைக்கு பாதுகாப்பளிக்க வந்த நீவிர் உமது இனத்திலேயுதித்த கன்னியர்களுக்கு ஐந்து கணவரையும் கட்டிவைத்து ஆருவதுநபர் பேரிலும் கள்ளக் காதல் செய்ய ஏற்பாடு செய்வீராகில் (துரோபதையைப் போல்) நாங்கள் துரோபதையை விபச்சாரி யென்று சொன்னதை வாபஸ் வாங்கிககொள்வதுடன் உம்மிடம் மன்னிப்புக்கேட்கவும் தயாராயிருக்கின்ருேம்.

இந்தி எதிர்ப்பு செய்து சிறைபுகுந்தால் காங்கிரஸ்காரரைப்போல் தியாகி ஆகிவிடலாமென்னும் நினைவா? பத்து ஏக்ரா நிலம் கிடைக்குமென்ற நினைவா என்று, தன்னையுணராமல் தருதலைப் புத்தியுடன் எழுதவந்த எத்தர்குலக் கொழுந்தே! யோசித்துப் பார்; உங்கள் தியாகத் திருக்கூட்டங்கள் பராறியாய், ஏன்? அன்னக் காவடிகளாய் அலைந்தது போய் அர்த்தராத்திரியில் யாருக்கும் தெரியாமல் தபால்பெட்டியில் தீவைத்து ஆகஸ்ட் தியாகியாகிய காரணத்தைக் காட்டி சாக்கு உடையை சாட்சியாய் வைத்து, லைசென்சும் பர்மிட்டும் வாங்கிதருவதாகச் சொல்லி கைக்கூலி வாங்கி கார் சவாரியும், பங்களாவாசமும், செய்வதுதான் தியாகமா? மானபிமானமின்றி தியாகத்தை விலைகூறி பத்து ஏக்ரா நிலத்துக்கு பல்லைபிழித்து யாசகம் கேட்கும் ஈனத்தொழிலை மறந்து கொடைகொடுப்பதன்றி யாசகம் கேட்கும் பழக்கமே எங்

களைக் கேட்கத் துணிந்த உன் எட்டி மண்டைக்கு எதைச் சொன்னால் தான் ஏரப்போகிறது. ஒருவாய் சோத்துக்கு ஊர்வழிபோகும் ஊதாரிப் பார்ப்பான் என்ற பழமொழி உங்கள் கூட்டத்துக்குத்தான் இருக்கின்றதே ஒழிய வேறு யாருக்கு இருக்கிறது. ஒரு வாய் சோத்துக்கே ஊர்வழி போகக்கூடிய நீங்கள் 10 ஏக்கர் நிலங் கிடைத்தால் விடவா செய்வீர்கள் மானத்தைக்கூட விலே சொல்லுவீர்களே.

தட்டு புரட்டுத் தர்ப்பை சூரரே உமது 5—12—48உ 30-வது இதழ் 5-ம் பக்கம் 3-ம் பத்தியில் 1949-ம் வருடம் ஜனவரி மாதத்திலிருந்து ஆங்கில தார்மீக இந்து வெளிவரும் என்று விளம்பரம் செய்திருக்கிறீர் அதே இதழ் 6-ம் பக்கம் முதல் பத்தியில் "தங்கள் ஆங்கிலப் பத்திரிக்கையையும் கண்ணுற்றேன் அதற்காக எனது மனமார்ந்த வந்தனம்" என்று பத்திரிக்கை வெளிவருவதற்கு 1 மாசத்திற்கு முன்பே கண்ணுற்றதாக ஒரு கபோதியின் கடிதத்தையும் நீவிர் தன்னைமறந்தோ அல்லது தன்நினைவற்றோ பிரசுரித்திருப்பதை நோக்கின் ஒருசில அனமதேய அறிவிலிக்ளை கைக்கூலி கொடுத்தமர்த்திக் கொண்டு அவர்கள் எழுதியதாக பாவனை செய்து பகுத்தறிவுக்கும், நூல் ஆராய்ச்சிக்கும், அறிவுக்கும் ஒவ்வாத விதமாய் முன்னுக்குப் பின் முரணாகவும் முட்டாள் தனமாகவும் எழுதுவதை பார்க்கின், பிழைப்புக்கு வழியின்றி மின்னல் வேகத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு கட்சியைத் தாக்கி எழுதினல் பத்திரிக்கை தொழில் மூலம் வாழ்க்கை நடத்தி எத்தி வாழலாமென திட்டமிட்டு வேலைசெய்வதாக தெரிகிறது உன் போக்கு, நீ நினைக்கிற அளவுக்கு ஏமாளிகளில்லை நாட்டில் என்பதை உணர்ந்து நடந்து கொள்.

காட்டிக்கொடுத்து நாட்டைக் கெடுப்பதிலும், கூட்டிக்கொடுத்து குலத்தை விருத்திசெய்வதிலும் கைதேர்ந்த எம்டி மண்டையைப் படைத்த எத்தர்களின் வழிவந்த பித்தர்களின் பிரதிநிதியாய் திகழும் சுரணையற்ற சும்பனத் திருமேனியாம் தார்மீக இந்துவென்னும் தருதலையே! உமது இத்த மூளை கலங்கும் வரை எத்தனை பாணங்களை விட்டாலும் திருந்தமாட்டீர் போலும். "கைவேல் களிற்றொடு போக்கி மெய்வேல் பறியா நகும்" வீரர்கள் மலிந்த இந்த நாட்டிலே, உமது கிழிந்த பஞ்சாங்கத்திற்கும் சுவாஹா, சமா, சமர்ப்பியாமி சுலோகங்களுக்கும் ஏமாந்த சோணகிரிகள் பலர் இன்னும் இருக்கின்ற காரணத்தாலன்றோ சற்றும் பயமின்றி, திராவிடத் தமிழகத்திலே வசிக்கின்றோமென்ற எண்ணத்தையுங் கூட மறந்து, சுரண்டுவது தமிழனா, பனியாவா? வென்று வடநாட்டு குஜராத்திகளுக்கும் பனியாக்களுக்கும் வக்காலத்து வாங்கிக்கொண்டு கேள்வி கேட்கத் துணிந்தீர் போலும்.

வருங்காலத் திராவிடத் தனியரசிலே சுரண்டுபவன், சுரண்டப்படுபவன், ஆண்டான் அடிமை, ஏழைபணக்காரன், பாட்டாளி, தொழிலாளி முதலியவர்க்கபேதமற்ற சுதந்திர சோஸலிஷக் குடியரசாகவே இருக்குமாகையால், அத்திபூத்தாப்போல், இரண்டொரு முத்தையா செட்டிகளும், அழகப்பர்களும், இன்றைய படேலின் பாசீஸ சர்க்காரிலே சுரண்டினாலும் சுரண்டப்பட்ட சொத்துரிமைகளத்

தனையும் திராவிட நாட்டிலே தானிருக்கும், பணி யாக்கள் தமிழ் நாட்டில் சுரண்டி வட நாட்டில் கொண்டு குவிப்பதைப்போல் இல்லாமல் சுரண்டப் பட்டதெல்லாம் இங்கேயே இருப்பதால், என்று தனியரசு மலர்கிறதோ, அன்றே சுரண்டப்பட்ட பணங்களனைத்தையும் நாட்டின் பொதுவுடமை யாக்குவோ மென்பதை யுணராது வடவர்களுக்கு வக்கலாத்து வாங்கும் நுமது போக்கை நோக்கின், ஆட்டிப்பிழைக்க (மணி) இடங்கொடுக்கக் கூடா தென்பதுடன் அண்டிப் பிழைக்கக்கூட இந்த அக்ரகார அருதலிக் கூட்டங்களுக்கு அனுமதி கொடுக்கக் கூடாதென யாம் முடிவுகட்டுமுன்பே நீவிர் வடநாடு சென்று பணியாக்களுக்கு பஞ்சாங் கம் பார்க்க முடிவுகட்டி விட்டீர்களென்றே நினைக் கிறோம்.

மானுபிமானமின்றி மாற்றானை மருவி மடியிலி ருப்பதை பிடுங்கி வாழும் மடிசஞ்சிகளின் சிரஞ் சீவிகளே, தமிழர்களா சுரண்டுகிறார்கள் ஆம் தமி ழர்கள் சுரண்டத்தான் செய்கிறார்கள். எங்கே? ஆப்பிரிக்காவிலுள்ள ஆரஞ்சித் தோட்டங்களி லுள்ள அட்டைகளைச் சுரண்டி அப்புறப்படுத்துகி றார்கள். இலங்கையிலே இருக்கும் தேயிலைத்தோட் டங்களில் தேயிலையைச் சுரண்டிக்கொடுத்து கூலி வாங்குகிறார்கள். மலேயாவிலுள்ள ரப்பர் மரங்களி லேயுள்ள ரப்பர்பாலைச் சுரண்டிக் கூலி வாங்குகி றார்கள். பர்மாவிலே பாங்காடாய் கிடந்ததைச்

சுரண்டி வளமிக்க வயல்களாக்கினர் எம்மக்கள். இதற்குப் பேர் சுரண்டல் என்றால், கால் மணிநேரம் கோர்ட்டிலே கத்திவிட்டு ஆயிரக்கணக்கில் வாங்கும் உமது குலத்திலே யுதித்த வாயாடிவம்பர்கள் செய்கைக்குப் பெயர் சுரண்டலா? கொள்ளையா?

அபிநய மென்றும், பரதநாட்டியமென்றும், கலையென்றும் சொல்லி காலைத்தூக்கி, கையை நீட்டி, கண்ணைச்சிமிட்டி, செஞ்சை ஆட்டி, இடையை ஆட்டி, ஏன், சைடுத்தாவணியை ஒட்டி ஒருமணி நேரம் ஆடிவிட்டு பல ஆயிரம் ரூபாய்களை அபேஸ் செய்கிறார்களே உங்கள் அக்ரகார அமுக்காயித் தங்கைகள் இதற்குப் பெயர் சுரண்டலா? அல்லது விபச்சாரக்கொள்ளையா? ஏன், மான ஈனமற்ற Skin to Skin Nothing Sin என்ற மாய மந்திரங்களைப் பிரயோகித்து சர்க்கார் காரியாலயங்களிலே சர்வம் உச்சிக்குடுமிமயமாய் அமர்ந்துகொண்டு ஏழைகளின் வரிப்பணத்திலிருந்து சம்பளத்தின் பெயராலும் கிம்பளத்தின் பெயராலும் வாரிச்சுருட்டும் உங்கள் தொழிலுக்குப் பெயர் சுரண்டலா அல்லது திருட்டா? யாரைப்பார்த்து சுரண்டுபவர்களென்று சுணங்கனைப்போல் குரைக்கிறீர். ஆளந் தெரியாது இனியும் காலை விடுவீராகில் உமது குலத்தையும் உம்மையும் கிழிந்த பாதரக்ஷையைக் கௌவக்கொடுத்து பிய்ந்த வாரியலால் வெண்சாமரம் வீசி விரட்டுவார்கள் இந்த நாட்டுச்குரிய மக்களென்பதை யுணர்ந்து வல்லினம் மெல்லினம் பார்த்து

வார்த்தைகளைப் பிரயோகம் பண்ணென்று உங்கள் பால் இரக்கம்கொண்டு சொல்லுகின்றோம் திருந்திக்கொள். மக்களை மாக்களாக்கும் உங்கள் சாஸ்திரங்களை சாடும் தன்மானத் தோழர்களைக் கண்டு ரத்தம் கொதிக்கிறது, நெஞ்சு குமுறுகிறது, உடல் பதைக்கிறது, மீசை துடிக்கிறதென்று துள்ளிக்குதிக்கும் துப்புக்கெட்ட தூர்த்தரே, ஆண்மையைக்குறிக்கும் மீசையை மழுங்கச் சிறைத்து மங்கையரைப்போல் தோற்றமளிக்கும் உங்களுக்கு மீசை எப்படித் துடிக்கும்? ஒருவேளை உச்சிக்குடுமி துடிக்கும்போலும்.

இரண்டு காலுமில்லாத முடவன் தாண்டவராயன் என்ற பெயரை கொண்டிருப்பதுபோல் இருக்கிறது, நீங்கள் மீசை துடிக்கிறதென்று சொல்லுவது. நாட்டுக்குறிய மக்களையே நயவஞ்சகமாய்ச் சுரண்டுவதுமின்றி ரத்தம் வேறு உங்களுக்குதுடிக்கிறதென்றால் காரண காரணமில்லையே; பட்டைச் சோற்றுக்கு நெட்டுறுப்போடும் உங்கள் மொட்டைச்சிகள் குட்டிச்சுவரருகில் குப்பையள்ளும் குப்பண்ணனோடு குலாவுவதைக் கண்டல்லவோ உங்கள் ரத்தம் கொதிக்கவேண்டும். அம்பாள் கோவிலில் அபிசேகம் வாங்கப்போவதாகச்சொல்லி அக்ரகாரத்துக்கு அப்பளம் விற்கவந்த அய்யாச்சாமியுடன் அழகு லீலைகள் செய்யும் உங்கள் அம்மாமிகளின் அக்ரமங்களைக் கண்டல்லவோ நீவிர் உடல் பதைக்கவேண்டும். நெய் விற்கவந்த நெடுமாறனி

டம் நெடுநேரம் காதல்புரிந்து கற்பைக் குலைக்கும் உங்கள் அக்கிரகார அமங்கலிகளைக் கண்டல்லவோ உமது நெஞ்சம் குமுறவேண்டும்.

தட்டிப்பேசுவதோடு மட்டுமின்றி தலையில் குட்டிப்பேசவும் புறப்படுங்கள் என்று புத்தியில் லாத் தனமாய் கத்தும் இயற்பகை நாயனே, உங்களால் முடியுமா தலையில்குட்டிப்பேச. நாலரை கோடி திராவிடர்களும் ஏகநேரத்தில் விடும் மூச்சுக்கு முன்னால் நின்றால்கூட நீங்கள் உங்கள் பூர்வீக இடமாகிய மத்திய ஏசியாவுக்கு தூக்கியெறியப்படுவீர்களே. அதிகாரம் அக்கிரகார அறுதலிகளிடம் இருக்கிறதென்ற அகங்காரத்தால் அற்பனுக்கு வாழ்வுவந்து அர்த்தராத்திரி குடைபிடிப்பதைப் போல் அறிவிழந்து நிற்கும் உங்களுக்கு கேடுகாலம் சமீபித்து விட்டதுபோலும், பரத்தைக் குணம் கொண்ட பார்ப்பனீய பராரிகளை பாராளும்மன்றத்தில் அமர்த்தினால் அந்தஅரசும்ஒழிந்துவிடும்என்ற பொருள்பட, நூலேறக் கோல் சாயும் என்ற நுண்ணறிவாளரின் நுட்பமான புத்திமதியை உணராது இன்று இந்தியப் பாராளும் நிர்வாக குழுவிலே சர்வம்டவாலிமயமாய் இருக்கின்றீர்கள் என்னென்ன அனர்த்தங்கள் விளையுமோ இந்நாட்டிற்கு, யாரறிவார். குட்டிப்பேசுவதற்குறிய காலமும் சமீபித்து விட்டது அப்பண்ணயங்காரே அழகாய் முடி சிங்கரியும் என்று அதட்டிச் சொல்லவும், குப்புவையரே, வெளுப்பு நன்றாய் இல்லையே என்று தட்டிச் சொல்

லவும், சுந்தரப்பட்டரே, சுத்தம் செய்யும் கக்கூசை யென்று கடிந்து சொல்லவும், கிருஷ்ண சர்மாவே, சல்தி கூட்டு குப்பையை என்று குட்டிச்சொல்லவும், ராமவர்மாவே, வண்டியைச் சீக்கிரமாக ஓட்டும் என்று உரத்துச் சொல்லவும், அக்கிரகார அலர்மேலுகளை அரிசி குத்திகொடுக்கும்படி அதட்டிச்சொல்லவும் அதிக நாள் இல்லையென்பதை அறிந்து, அறியாமையை அகற்றி உயர்ந்தவனென்ற அகங்காரத்தை ஓட்டி, மக்களோடு மக்களாய் உழைப்புத்தரத்தில் பங்கெடுத்து வேலைசெய்யுங்கள். இன்றேல் இடமில்லை இந்தநாட்டில்.

**வெட்கக்கேடு நாட்டிற்கே அவமானகரமானது, பொது மக்களின் எசசில் பணத்தைப் பறித்து ஏப்பமிடும் கட்சி** என்று கழுதைக் குரலில் எருமையைப் போல் கத்தும் கணிகையர் குலத் தூதனே நாளொன்றுக்கு எட்டணு சம்பாதிக்கும் எழ்மை மக்களைக் கொண்ட எங்களையா பொதுப்பணத்தை கொள்ளையடிப்பவர்களென்று சொல்லுகிறீர். கடவுளின் பெயரால் காணிக்கை யென்றும் தட்சணை யென்றும் தட்டிப்பிழைக்கும் தர்ப்பைபுல் தார்மிக இந்துவே, மக்களிடத்திலே மதியை விதியின் பெயரால் மயக்கி எத்திப்பிழைப்பதும் காணுமல் கோவிலிலிருக்கும் அம்மன்களின் அழகு தாலிகளையும், அழகிய சேலைகளையும், திருடுவதுடன் வைரக்கற்களை எடுத்துக்கொண்டு இமிடேசன் கற்களை வைத்தும், தங்கக்கலசங்களைத் திருடியும் வாழ்க்கையை

நடத்தி தொப்பையைப் பெருக்கும் தர்ப்பை வீரரே நீங்கள் செய்வதன்றோ வெட்கக்கேடு, அக்கிரகார அழகிகளாம் உங்கள் அலர்மேலுகள் சாணி அள்ளவந்த சங்கரன்களோடு திருட்டுச் சல்லாபம் செய்வதன்றோ அவமானகரமானது.

பாப்பாரச்சேரிக்கு பால் கறக்கவந்த பழனியப் பனோடு பகலென்றும்பாராமல் பாங்குடன் பரிந்து மருவும் உங்கள் பாவையர் செயலன்றோ வெட்கக் கேடு, வண்டியோட்ட வந்த வடிவேலுடன் வகை வகையாய் ஆலிங்கனாதிகள் செய்யும் உங்கள் ஆட லழகிகள் செய்யும் அப்பழுக்கற்ற தப்பிலித்தன மன்றோ அவமானகரமானது. ஒழிகக்கூச்சல் ஒழிக, என்று ஒப்பாரி வைத்த படித்துப் பட்டம் பெற்ற தாக காட்டிக்கொண்ட படித்தமுட்டாளே, உலகத் திலே நடந்த விடுதலைப் போராட்டங்களில் சரித்தி ரங்களைப் படித்திருந்தால் இந்த ஒப்பாரிவைக்கத் துணித்திருக்கமாட்டீர். ரஷ்ய நாட்டில் கொடுங் கோன்மை புரிந்த ஜார்மன்னனைப்பார்த்து, பொது வுடமையை வளர்க்க லெனினும் அவனது சகாக் களும் ஜாரீஸம் ஒழிக என்ற சுலோகத்தைக் கொடுத்தது தெரியாதாதா? சரித்திரம் படித்தா லல்லவோ தெரியும்.

ஏன்? காந்தியடிகள் தலைமையில் நடந்த விடு தலைப்போரில் ஏகாதிபத்தியம் ஒழிக, வெள்ளையர் ஆட்சி ஒழிக என்ற புரட்சி கோஷங்களிட்டதுமா

தெரியாமல் போனது. அடிமுட்டாளிலும் சுத்த தடி முட்டாள்த்தனமாய் எழுதத்துணிந்ததற்குறித் தார்மிக இந்துவின் எழுத்தாளனே, உருவத்தில் சிறியதாய் இருந்து சக்தியில் பெரியதாயிருப்பதை யும் கடவுளையும் ஒன்றாக முடிச்சுப்போடும் முடிச்சு மாறியே; உனக்கு விஞ்ஞானத்தில் பட்டம் கிடைத் திருக்கிறதைப் பார்த்தால் நீ படித்து தேர்ச்சிய டைந்து பட்டம் பெறாமல் பாவையரைக் காட்டி பசப்புமொழி புகன்று பட்டம் பெற்றிருப்பாயென் றே முடிவுகட்டவேண்டியிருக்கிறது. நேக்கும், நோக் கும் தவிர தமிழில்வேறு அறியா தருதலைகளாகிய நீவிர், அ டு க் கு மொ ழி, அடுக்குமொழி யென்று அ றி ஞ ர் அண்ணாவைக் கண்டு பொறாமைப்படுவ தைப்பார்த்து உங்கள் போக்குக்கு இரங்குவதா? அன்றிச் சி ரி ப் ப தா வென்றுகூடத் தோன்ற வில்லை.

அண்ணாவின் கம்பரசத்திற்கு மறுப்பு எழுது வதாகவும், விஷ டோசென்றும், பச்சிலைமுறி வென்றும் படோடபமாய் டப்பாக்குத்திய ஊதாரி யே, உன்னால் முடிந்தா ஒரு வார்த்தைக்குப் பதில் கூற, 60 பக்கங்களுக்கு மேற்பட்ட கம்பரசத்திலே அல்குல் பரவை என்ற இரண்டு வார்த்தைகளை மட்டும் எடுத்துக்கொண்டு, அந்த இரண்டு வார்த் தைக்கும் உன் சுயபுத்தியுடன் சூத்திரம் சொல்லத் தெரியாமல் மதுரை கோபால கிருஷ்ணக் கோன் தமிழகராதியைப்புரட்டி சாட்சிக்கழைத்த சனாதன சவுண்டியே! ஆறுவார பீடிகை போட்டு கம்பரச

111576

ஆராய்ச்சியிலிறங்கி அல்குலுக்கு புதுப் பொருள் கண்டுபிடித்திருக்கும் புல்லேலந்தியே! உன் இனத்தைச்சார்ந்த கிருஷ்ணமாச்சாரியின் 'கம்பர் கவி நயத்'தைப்புரட்டிப்பார். அல்குல் என்றால் பெண் குறி என்று இருக்கிறதா அல்லது அடிவயிறு என்று இருக்கிறதா என்று பார். ஒரு வேளை அடி வயிற்றைத்தான் அல்குலாகக் கருதி உங்கள் அனந்த சயன லீலைகளை முடித்துக்கொள்வீர்கள் போலும். பிரமனின் முகத்திலிருந்து உதித்தவர்களல்லவா நீங்கள் அல்குல் நெற்றியில்தான் இருக்கிறது என்று கூட நீ வாதாடுவாய்போலும்.

உன் செய்கையானது மலையோடு மாங்காய் மோதியதைப் போலல்லவா இருக்கின்றது. கம்பரசத்தையே கலங்கடிப்பதாக கத்திய நீவிர் ஒரு வார்த்தைக்குகூட பதில் கூற முடியாமல் போன பின் உமக்கு ஒரு பத்திரிக்கையும் வேண்டுமா?

ஒருசிலதே. முக்களைக் (தேசியமுஸ்லீம்கள் என்றாலும் சரி, அல்லது தேர்தெடுத்த முட்டாள்கள் என்றாலும் சரி) கொண்டு திராவிட கழகத்தார் மீது மோதவிட்டு வேடிக்கை பார்க்க விரும்பும் முப்புரியே! உன் முடிவு என்னவாயிற்று, சங்கராச்சாரியின் சுண்டல் சண்டையைத் தீர்த்துவைக்க நீ ஆண்டிவேஷம் போட்டு ஆசிரியர் குறிப்பு எழுத வேண்டியதாயிற்று.

ஏ! மானங்கெட்ட மரமண்டையே சிறிதுரோச மிருந்தால் அணுவளவு விவேகமிருந்தால் நீர் தன் மான திராவிடர்களுடன் வாதுக்கு வருவையோ? பகுத்தறிவுப் பாசறையை நோக்காது பார்ப்பனச் சேரியில் நடக்கும் அம்மாமிகளின் அலங்கோல நிலையைச் சீர்திருத்தும். அக்கிரகாரத்திலே மறு மணத்தைப் புகுத்தவேலை செய்வீர்களாகில் பார்ப் பனச்சேரிக்குப் பக்கத்திலே சர்வசாதாரணமாய் நடக்கும் சிசுக் கொலைகள் குறையும். சென்னைச் செங்கான் கடைப் பஜாரிலே தலைவாசல் காத்து கண்காட்டி காசுபறிக்கும் உங்கள் கணிகையர் தொகை குறையும். இவைகளை விடுத்து எம்முடன் சாடுவீராகில் வாரந் தவராது சவுக்கடி கொடுத்துக் கொண்டே இருப்போமென்பதையும் அறிந்து கொள்ளும்.

தார்மிக ஹிந்துவென்னும் பெயரால் தடித்த னம் கலந்த வார்த்தைகளால் வசைபாடுந் தொழி லைக் கொண்ட, தர்ப்பையைக் கொண்ட விப்பிரர் என்று பறை சாற்றும் பார்ப்பாரப் பதரே! பகுத் தறிவுசிறிதுமின்றி பலம்கொண்ட திராவிடர்களை வசை பாடுகின்றோமே என்ற எண்ணமும்இன்றி, திராவிடனே பதில் சொல்லுவாயா? உன் மனைவியு டன் பிறர் உறவாடச் சம்மதிப்பாயா? என்று கேட் கத் துணிந்ததை நோக்கின் நரிக்கு இரக்கங்காட்டி னல், கிடைக்கு இரண்டு ஆடுகேட்கும் என்ற பழ மொழி தான் ஞாபகத்திற்கு வருகின்றது.

ஹிந்து மதத்திற்கு இணையில்லையென்று இயம்பி ஆர்யப் பூர்வோத்திரம் தெரியாது, ஆழந் தெரியாமல் காலைவிட்ட அம்மாமிகளின் அடாத செய்கையால் அவதரித்த ஆரியப் பிண்டங்களே! மற்றவனுக்கு உரிமையானவளை விரும்பி நடக்கின்ற அறிவீனம், அறத்தையும், பொருளையும் அறிந்தவரிடம் இல்லையென்பதற்கொப்ப, பிறன் பொருளால் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்தறம் பொருள் கண்டார் கண் இல். என்ற எங்கள் தமிழ் மறைப்படி தூயவாழ்க்கை நடத்தும் திராவிடர்களைப் பார்த்து காட்டுமிராண்டித் தனமாய் கடாவ வந்த கணிகையர் வழி வந்த கசடரே நுமது வடமொழிப் புராணத்தில் உங்கள் ஒழுக்கத்தை வகுத்திருப்பதைக் கவனியும் "மாதாமு பைத்ய, கஸார முபைதி, புத்ரார்த்தித, சகாமார்த்தி நா புத்திர லோகோ நாஸ்தித் சர்லம்பரவோ, விருந்துஹ: தஸ்மாத் புத்ரார்த்தம் மாதரம், ஸ ரஞ்சாதி, ரோஹதி, என்ற சமஸ்கிருத சுலோகத்தைப் பார்மின்" புத்திரார்த்த நிமித்தம் தாயோடாகிலும், தமக்கையோடாகிலும், மகளோடேயாகிலும், பின்னை யாரோடேயாகிலும் கூடிப் புணரலா மென்றிருக்கும் உங்கள வேதத்தை நீங்கள் கடுகளவும் தவறாது கடைப்பிடித்து ஆரியப் பிரஜா உற்பத்தியைப் பெருக்கும் பேயர்களே, சற்றும் வெட்கமின்றி வெண்தோல் படைத்து விரகதாபம் வீரிட்டு, வீட்டுக்குள் வந்தவர் யாரானாலும் விவேகத்தை மறந்து மருவும் மானமற்ற மண்டையைப் படைத்த மூண்

டைகளைச் சீர்திருத்த வழியின்றி பெண்ணிற் பொருந்தக்கயாஉள? கற்பென்னும் திண்மை உண்டாகப் பெற்ற யெம் பெண்ணினத்தைப் பற்றி இனியும் எழுதத் துணிவீராகின் நும் துப்புக்கெட்ட மூஞ்சியில் துடப்பத்தால் துடைக்க நேரிடுமென்பதை யுணர்ந்து நடமின்.

உலகானுபவம் இல்லாத உஞ்சிவிருத்தி உச்சிக்குடுமி உலுத்தர்களே, உங்களுக்கோ, உங்களை அடிவருடும் தாசர்களுக்கோ சிறிதும் பகுத்தறிவோ அல்லது சிந்திக்கும் சக்தியோ இல்லை யென்பது, உங்கள் தார்மிக இந்துவின் மூலம் தெற்றென விளங்குகின்றது.

கம்பராமாயணத்திலே! சேதுபந்தனப் படலத்திலே! அணை கட்டுவதற்காக மலைகளைக் கடலிலே போடும் பொழுது கிளம்பிய நீர்து வாலைகள் தெய்வலோகத்தில் இந்திரன் சபையில் நடனமாடிக் கொண்டிருந்த நடன மாதர்களின் ஆடைகளை நனைத்து அவர்களின் அல்குலும் தெரிந்தது என்று கம்பருக்கேயுரிய காமக் கலையைக் காட்டியிருப்பதைப் படியுங்கள். ஆடை நனைந்து அல்குல் தெரிந்ததென்று, நும்போன்ற அறிவிலிகளின் அபிப்யிராயத்திற்கு வழியின்றி தெளிவாக கூறியிருக்கின்றரே, இது காம விகாரத்தை காட்டவில்லையா? அது மாத்திரமில்லையே, ராமனுக்கு பட்டாபிஷேக தினத்தன்று நகரில் அழகுபடுத்திய

பந்தலை வர்ணிக்கும் பாடலில் இளம் மாதர்களின் துடையைப் போன்ற வாழைகளை நட்டியிருந்தார்களென்றும், பந்தலின் உச்சி முகடுகளில் இளங் கன்னியர்களின் முலைகளைப் போன்ற பொற் கலசங்களை வைத்திருந்த தாகவும் பாடிய காமக் கருத்துக்களை நோக்குவீராக. அக்கிரகார அருதவிகளின் ஆசையைப்பெற்று ஆரியர்களுக்கு வால் பிடிக்க வந்த இனத் துரோகியாரே, நாட்டிலே நூற்றுக்கு தொண்ணூறு பேர் கல்வியறிவற்றவர்களாயிருப்பதை முன்னிட்டு, பாமரமக்களுக்கும் விளங்கும் வகையில் "எங்கு போய்" "அங்குதான்" என்று எழுதிருப்பதை, மலையைக் கெல்லி எலியைப் பிடித்தது போல் குற்றம் கண்டு பிடித்து விட்டதாக குதிக்கும் இன உணர்ச்சியற்ற இயற்பகையே; சிந்தித்துச் சொல்லும் "அங்குத்தான்" "எங்குப் போய்" என்று பத்திரிகையிலே எழுதினல் எத்தனை பேருக்கு விளங்கும்? யாவருக்கும் விளங்கும் முறையில் எளிய நடையில் எழுதுவதுதான் அறிவுடைமை என்பதை அறியாத ஆரிய தாசரே! அவசரப்பட்டு ஆழந் தெரியாமல் காலை விடாதீர். கூறியது கூறல் என்னும் குற்றம் சொல்லவந்த குல்லூகப் பட்டர்களின் அடிவருடும் அற்பர் சிகாமணியே, நீங்கள் போற்றிப் புகழும் கம்பர், பாட்டுத்தவராமல் அல்குலை அழைக்கும் பொழுது அதைக் கண்டித்து எழுதவேண்டுமானல், கூறியது கூறித்தானேயாக வேண்டியதிருக்கிறது.

